**22.02.2019**

பெறுநர்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்,**
தலைமைச் செயலகம்,
சென்னை.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம்,**

பொருள் :ஜாக்டோ-ஜியோ காலவரையறையற்றப் போராட்டத்தில் கலந்து கொண்ட அரசுக் கல்லூரிப் பேராசிரியர்களின் பணியிட மாறுதல் ஆணையை இரத்து செய்யக் கோருதல் - தொடர்பாக.

'புதிய ஓய்வூதியத் திட்டத்தை இரத்து செய்து பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் அமல்படுத்துதல்' உள்ளிட்ட நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த மாதம் நடைபெற்ற ஜாக்டோ-ஜியோ காலவரையறையற்றப் போராட்டத்தில் கலந்து கொண்ட கல்லூரி ஆசிரியர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாணவர் நலன் கருதி பணிக்கு திரும்புமாறு விடுத்த வேண்டுகோளை பணிந்தேற்றும், மாணவர்கள் நலன், பெற்றோர் மற்றும் பொதுமக்களின் மனவுணர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டும், 31.01.2019 அன்று பணியில் சேர்ந்து கல்விப் பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் அரசுக்கல்லூரி பேராசிரியர்கள் 27 பேர்களை பணியிடை நீக்கம் செய்து 12.02.2019 அன்று கல்லூரிக்கல்வி இயக்குநரகம் ஆணை வழங்கியது. ஆசிரியர் மற்றும் மாணவர் நலன் கருதியும், இதர துறைகளின் பணியிடை நீக்கம் மற்றும் பணியிடமாறுதல்கள் உள்ளிட்ட ஆணைகள் இரத்து செய்ததை வழியொற்றியும், அரசு கல்லூரி ஆசிரியர்கள் **மீதான பணியிடை நீக்க ஆணையை இரத்து செய்யவேண்டுமெனக் கழகம் கோரியதை கனிவுடன் பரிசிலித்து அவ்வாணையை இரத்து செய்தமைக்காக தமிழக முதலமைச்சர் , உயர்கல்வித்துறை அமைச்சர், உயர்கல்வித்துறைச் செயலர் மற்றும் கல்லூரிக்கல்வி இயக்குநர் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.**

ஆயினும், மேற்குறிப்பிட்ட பேராசிரியர்களில் 16 அரசு கல்லூரிப் பேராசிரியர்களை பணியிட மாறுதல் செய்து **ஆணை** வழங்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலன் கருதியும் தங்களது நியாயமான கோரிக்கைகளை அரசு நிறைவேற்றிட வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு பணிக்குத் திரும்பியிருக்கும் ஆசிரியர்கள் மன வருத்தமின்றி தங்கள் கல்விப்பணியாற்றிடவும் ஏதுவாக இப்பணியிடமாறுதல் ஆணைகளை இரத்து செய்து மீண்டும் அனைத்து ஆசிரியர்களும் **அவர்கள் பணியாற்றிய அதே கல்லூரிகளிலேயே பணியில் சேருவதற்கு ஆவன செய்யுமாறு** தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி!

தங்கள் உண்மையுள்ள

| வ.எண் | பெயர் | துறை | கையொப்பம் |
| --- | --- | --- | --- |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

நகல்:

1. **உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள்**
   **தலைமைச் செயலகம்**
   **சென்னை.**

2. **உயர்கல்வித்துறைச் செயலர் அவர்கள்**,
   **தலைமைச் செயலகம்**
   **சென்னை.**

3. **பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறைச் செயலர் அவர்கள்**
   **தலைமைச் செயலகம்**
   **சென்னை.**

அன்பார்ந்த தோழரே, தோழியரே வணக்கம்.

**இக்கடிதத்தை படி எடுத்து அனைத்து உறுப்பினர்களிடமும் கையொப்பம் பெற்று நாளை மதியத்திற்குள் முதலமைச்சர், உயர்கல்வித்துறை அமைச்சர், உயர்கல்வித்துறைச் செயலர், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை செயலர் ஆகியோருக்கு அஞ்சலில் அனுப்பி வைக்கவும்.**

**இது தொடர்பாக விவாதிக்க எதிர்வரும் 24.02.2019 அன்று நடைபெறும் மாநில செயற்குழுவில் மாநில செயற்குழு உறுப்பினர்கள் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.**

## *மாநில செயற்குழுக் கூட்டம்*

நாள் : 24.02.2019 ஞாயிற்றுக்கிழமை
காலை 10.00 மணி

இடம் : மன்னர் சரபோஜி அரசு கலைக்கல்லூரி
(தன்னாட்சி), தஞ்சாவூர்.

கருதுபொருள்:
1. தோழர்களின் பணியிடமாறுதலுடன் கூடிய பணியிடைநீக்க இரத்து
2. பிற

**இரா. தாமோதரன்**
பொதுச்செயலர்